# பொற்சுடர்

## கவிதைகள்



"துறைவன்"

புதுப்புனல் பதிப்பகம்,
திருச்சி-2.

# பொற்சுடர்

## கவிதைகள்

துறைவன்

புதுப்புனல் பதிப்பகம்
திருச்சி-2.



## எஸ். கந்தசாமி
### "துறைவன்"

இவர் திருநெல்வேலிஜில்லா தென்காசியில் 8-1-1925ல் பிறந்தவர். திருநெல்வேலி மதுரைத் திரவியம் தாயுமானவர் இந்து கல்லூரியில் படித்து கணித நூலில் பி.ஏ. பட்டம் பெற்றவர். 1944-ம் ஆண்டில் சென்னைப் பல்கலைக் கழகத்தாரின் Franklin Gell தங்கப்பதக்கம் பரிசுபெற்றார். மாணவராக இருந்த கால முதற்கொண்டு கவிதைகளும், சிறுகதைகளும் எழுதியிருக்கிறார். இவரது "நாடகக்காரி"—நாவல் "சிந்தனை"யில் தொடர்ச்சியாக வெளியிடப் பெற்றது. இப்பொழுது பாரத அரசாங்க உத்தியோகத்திலிருக்கும் இவரது புனைபெயர் "துறைவன்". வானொலி ஒலிபரப்பிற்கென்று இவர் பல நாடகங்களும், உரைச் சித்திரங்களும் எழுதியிருக்கிறார். மகாத்மாகாந்தியடிகளின் வாழ்க்கை வரலாற்றை "இருளில் ஒளி" என்ற தலைப்பில் தொடர்நிலைச் செய்யுளாக யாத்திருக்கிறார்.

பல கவியரங்கங்களில் பங்கு பெற்றிருக்கிறார். பழந்தமிழ் இலக்கியத்திலும் பல்வேறு விஞ்ஞானத் துறைகளிலும் இவருக்கு நல்ல ஈடுபாடு உண்டு. மேடைப் பேச்சுக்களில் உணர்ச்சி வசப்படாமல் நிதானித்துப்பேசும் ஆற்றல் இவரது தனிச் சிறப்பு. இவர் பத்திரிகைகளுக்கு அவ்வப்போது எழுதிய கவிதைகளை தொகுத்து உருவாக்கப்பட்டது இந்த நூல். இவரது ஏனைய நூல்களும் புதுப்புனல் வெளியீடுகளாக வெளிவர இருக்கின்றன.